A-7

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்பு (2011–12 ஆம் ஆண்டு) – மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான சிறப்பு படிப்பு உதவித்தொகை திட்டத்திற்கான பரிசுத் தொகை உயர்த்தி வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் : 7 நாள் : 12.01.2012

மார்கழி 27, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.42, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.09.1995.
2) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.ஐ1/16427/2009, நாள் 18.06.2009 மற்றும் 26.09.2011.

------

ஆணை :

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான சிறப்பு படிப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கும், விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கும் பராமரிப்புத் தொகை வழங்கி ஆணையிடப்பட்டது.

2) மைய அரசின் கல்வி உதவித்தொகை பெற இயலாத, கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்க்கு, 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான சிறப்பு படிப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் (State Post-Matric Scholarship), விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கு வழங்கப்படும் பராமரிப்புப்படி மற்றும் கட்டாய கட்டணங்கள் மாதம் ஒன்றிற்கு ரூ.65/– முதல் ரூ.125/– வரை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.115/– முதல் ரூ.280/– வரை வழங்கப்பட்டு வருவதை, விடுதியில் தங்காது கல்வி பயிலும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்க்கு ரூ.100/– முதல் ரூ.175/– வரையும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு, ரூ.175/– முதல் ரூ.350/– வரையும் உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மான்ய கோரிக்கையின் போது புதிய அறிவிப்பாக வெளியிட்டுள்ளார். இதன் மூலம் 70,740 கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர் பயனடைவர்.

3) 2011–2012 ஆம் ஆண்டின் இத்துறையின் புதிய அறிவிப்பினைத் தொடர்ந்து கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடுமாறு அரசை ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

| பாடப்பிரிவு | விடுதியில் தங்காத மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை (மாதம் ஒன்றிற்கு) (தற்போது துறையில் வழங்கப்படும் உதவித் தொகை அடைப்புக் குறிக்குள்) | விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை (மாதம் ஒன்றிற்கு) (தற்போது துறையில் வழங்கப்படும் உதவித் தொகை அடைப்புக் குறிக்குள்) |
|---|---|---|
| தொழில்நுட்ப படிப்புகள் | 175(125) | 350(280) |
| முதுகலைப் பட்டப்படிப்பு | 140(125) | 225(175) |
| பட்டப் படிப்பு | 100(65) | 175(115) |
| பட்டயப் படிப்பு | 140(125) | 225(175) |
| +1, +2, சான்றிதழ் படிப்பு | 100(65) | 175(115) |

4) மேலும் மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு வழங்கப்படும் சிறப்பு படிப்பு உதவித் தொகையை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.3,53,55,050/– (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்துமூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து ஐம்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து 2011–2012 ஆம் கல்வி ஆண்டு முதல் மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு வழங்கப்படும் சிறப்பு படிப்பு உதவித் தொகையை விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.100/– முதல் ரூ.175/– (ரூபாய் நூற்று எழுபத்து ஐந்து மட்டும்) வரையும், விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.175/– முதல் ரூ.350/– (ரூபாய் முன்னூற்று ஐம்பது மட்டும்) வரையும் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| பாடப்பிரிவு | விடுதியில் தங்காத மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை (மாதம் ஒன்றிற்கு) (தற்போது துறையில் வழங்கப்படும் உதவித் தொகை அடைப்புக் குறிக்குள்) | விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை (மாதம் ஒன்றிற்கு) (தற்போது துறையில் வழங்கப்படும் உதவித் தொகை அடைப்புக் குறிக்குள்) |
|---|---|---|
| தொழில்நுட்ப படிப்புகள் | 175(125) | 350(280) |
| முதுகலைப் பட்டப்படிப்பு | 140(125) | 225(175) |
| பட்டப் படிப்பு | 100(65) | 175(115) |
| பட்டயப் படிப்பு | 140(125) | 225(175) |
| +1, +2, சான்றிதழ் படிப்பு | 100(65) | 175(115) |

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி – I திட்டத்தில் சேராதது – AV மெட்ரிக் படிப்பிற்கு மேல் படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பு படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் – 12 – படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 02 மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்பு.

(குதொகு 2225 01 277 AV 1220)

7) மாநில அரசின் சிறப்பு படிப்பு உதவித் தொகையினை மேற்கண்டவாறு உயர்த்தி வழங்குவதால் அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.3,53,55,050/– (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து ஐம்பது மட்டும்) கூடுதல் செலவினம் ஏற்படும். 2011–12 ஆம் ஆண்டில்மேற்கூறிய செலவினை மேற்கொள்ள 2011–2012 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.1,06,06,515/– (ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஆறாயிரத்து ஐநூற்று பதினைந்து மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

8) மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதி ஒதுக்கம் 2011–2012 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். மேற்கண்ட செலவினத்திற்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். 2011–2012 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2011–2012 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் தவறாது சேர்ப்பதற்கு உரிய நேரத்தில் நிதி(ஆ.தி.(ம)ப.ந.) துறைக்கு அனுப்பிவைத்திடுமாறு ஆதிதிராவிட நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.02/AD&TW/2011, நாள் 11.01.2012 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1366 (ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஆறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:–
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது– I&II ) துறை, சென்னை–9.
பள்ளி கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

பிரிவு அலுவலர் 12/1/12